## கார்ல் மார்க்ஸ் பிறந்த நாளில் – ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற

# இலட்சியப் பயணத்தில் வென்றிட உறுதி கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே.6-

பொதுவுடமை கருத்தியலை வழங்கிய கார்ல் மார்க்ஸ் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியப் பயணத்தினை வென்றிட உறுதி ஏற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கார்ல் மார்க்ஸ் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

சமத்துவ உலகைக் கட்டமைப்பதற்கான பொதுவுடைமைக் கருத்தியலை வழங்கிய கார்ல் மார்க்ஸ் அவர்களின் பிறந்தநாளில், ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியப் பயணத்தில் வென்றிட உறுதிகொள்வோம்!

உழைப்போர்க்கு உறுதுணையான மார்க்சியச் சிந்தனையை எடுத்து இயம்பிட, கன்னிமரா நூலக நுழைவுவாயிலில் அவரது திருவுருவச் சிலையினை நிறுவுவதற்கான இடத்தை நானே நேரில் சென்று தேர்வு செய்து, சிலை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது!

சிலையாக எழுந்து நிற்கவுள்ள மாமனிதர் மார்க்சின் சிந்தனைகள், மானிடச் சமுதாயத்துக்கு என்றும் ஒளி வழங்கட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியத்தில் உலக மே தினத்தை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. அனைத்து ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகளை வழங்கி உழைப்பாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ம.ஜெயச்சந்திரன் , டி.என்.முருகன், கார்த்திகேயன் , பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஜி. ரவிசந்திரன், S.லூயிஸ், கல்பட்டு வி.இராஜா, பூக்கடை கணேசன், ஓம்சிவசக்திவேல், பக்தவச்சலு, அஞ்சுகம் கணேசன், MJK. கிருஷ்ணமூர்த்தி, சடகோபன், ராஜ்மோகன், மோகன்ராஜ், காவிய வேந்தன், நிர்மல் ராஜ், வெங்கடேசன், பரசுராமன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## இன்று 6ம்தேதி திருப்பத்தூரில்

# சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு

சிவகங்கை,மே 6 -

இன்று 6ஆம் தேதி செவ்வாய்க்கிழமை திருப்பத்தூரில் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ளதாவது.



இன்று 6ம்தேதி சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் திருப்பத்தூரில் ராஜேஸ்வரி திருமணமண்டபத்தில் நடைபெற உள்ளது.திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் உள்ள ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மாலை 4 மணி அளவில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் மாவட்டகழக நிர்வாகிகள், செயற்குழு ,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய ,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நிகழ்ச்சி நிரல்.

பொருள் .3.5 .2025 செவ்வாய்க்கிழமை. சென்னையில் கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் 3=5=2025 நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

2.கழக வளர்ச்சி பணிகள்.

இத்தகவலை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, மே 6-

நாள் : 06.05.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

இடம் : கலைஞர் அரங்கம், தூத்துக்குடி.

தலைமை : திரு.G.செல்வராஜ், மாவட்ட அவைத்தலைவர்.

இக்கூட்டத்தில் மாநில அணி துணை செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.



பொருள்:

1. 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்மந்தமாக..

2. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

## கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தில்

# “நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!” சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் அறிவிப்பு!

இந்திய துணைக் கண்டத்தின் அனைத்து மாநில மக்களும் போற்றிடும் வகையினில் அனைத்து மாநில உரிமைமீட்பு, சமூகநீதிபாதுகாப்பு, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டல், ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்தல் போன்ற கொள்கைகளை காப்பாற்றும்வகையினில், தமிழினம்போற்றும்வண்ணம், தமிழ்நாட்டினை இந்தியத் திருநாட்டின் முதன்மை மாநிலமாக மாற்றி இந்திய திருநாட்டிற்கே வழிகாட்டும் வகையினில் திராவிட மாடல் ஆட்சியினை நடத்தி வரும் தமிழினத்தின் பேரன்பினை பெற்ற தலைவர், தமிழகத்தின்தனிப்பெருந்தலைவர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து - ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதனை பெருமையுடன் கொண்டாடிடும் வகையினில்,

திராவிட மாடல் நல்லாட்சியின்“ நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!” சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி நடைபெறஉள்ளன.

அனைத்து தரப்பட்ட பொது மக்களிடமும் கழக அரசின் சாதனைகள் சென்றடையும் வகையில், கூட்டங்கள் மிகுந்த எழுச்சியோடு நடைபெறத் தேவையான சிறப்பான ஏற்பாடுகளை அந்தந்த பகுதிக்குரிய ஒன்றிய, நகர செயலாளர்கள் செய்திட வேண்டும் எனவும், அந்தந்த பகுதிக்குரிய மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் அவரவர் பகுதிகளில் நடைபெற உள்ள கூட்டங்கள் சிறந்த முறையில் நடைபெற தேவையான ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| சட்டமன்றதொகுதி | ஒன்றியம் /நகரம் | பேச்சாளர் | நாள் |
|---|---|---|---|
| ரிஷிவந்தியம் | ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியம் | முருக்கம் முனுசாமி | 08.05.2025, வியாழக்கிழமை |
| ரிஷிவந்தியம் | ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியம் | முனைவர் சபாபதி மோகன் | 08.05.2025, வியாழக்கிழமை |
| ரிஷிவந்தியம் | சங்கராபுரம் வடக்கு ஒன்றியம் | நெல்லிக்குப்பம் புகழேந்தி செல்வி. ஐஸ்வர்யா | 08.05.2025, வியாழக்கிழமை |
| கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றியம் | சிறுவானூர் பரசுராமன் | 09.05.2025, வெள்ளிக்கிழமை |
| கள்ளக்குறிச்சி | தியாகதுருகம் தெற்கு ஒன்றியம் | இள. புகழேந்தி ஷாநவாஸ் | 09.05.2025, வெள்ளிக்கிழமை |
| ரிஷிவந்தியம் | திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியம் | சிறுவானூர் பரசுராமன் | 10.05.2025, சனிக்கிழமை |
| ரிஷிவந்தியம் | திருக்கோவிலூர் வடக்கு ஒன்றியம் | முனைவர் சபாபதி மோகன் செல்வி.ரோஜா | 10.05.2025, சனிக்கிழமை |
| ரிஷிவந்தியம் | திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம் | முருக்கம்முனுசாமி நேரு | 10.05.2025, சனிக்கிழமை |
| ரிஷிவந்தியம் | ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம் | நெல்லிக்குப்பம் புகழேந்தி | 11.05.2025, ஞாயிற்றுக்கிழமை |
| கள்ளக்குறிச்சி | தியாகதுருகம் வடக்கு ஒன்றியம் | துரைமணிவேலன் | 11.05.2025, ஞாயிற்றுக்கிழமை |
| கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி நகரம் | முனைவர் சபாபதி மோகன் | 11.05.2025, ஞாயிற்றுக்கிழமை |
| கள்ளக்குறிச்சி | சின்னசேலம் கிழக்கு ஒன்றியம் | சிறுவானூர் பரசுராமன் சதீஸ் | 12.05.2025, திங்கட்கிழமை |
| கள்ளக்குறிச்சி | சின்னசேலம் தெற்கு ஒன்றியம் | திரு.நெல்லிக்குப்பம் புகழேந்தி | 12.05.2025, திங்கட்கிழமை |

**வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.**
செயலாளர் -
கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


## அறிவார்ந்த சமூகமே நல்லதொரு தமிழ்நாட்டை உருவாக்கி தரும்!

# மாணவர்கள் சமூக வலைதளங்களுக்குள் சிக்கி சீரழிந்தால் மாணவ பருவம் வீணாகி விடும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் அறிவுரை!

சென்னை, மே. 6-

அறிவார்ந்த சமூகமே நல்லதொரு தமிழ்நாட்டை நமக்கு உருவாக்கி தரும். மாணவர்கள் சமூக வலைதளங்களுக்குள் சிக்கி சீரழிந்தால் மாணவ பருவம் வீணாகி விடும் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் மாணவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளது.



தினகரன்
மே 5, 2025 திங்கட்கிழமை
அறிவியலே பிரதானம்

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை வியத்தகு வகையில் வளர்ச்சியை பெற்று வருகிறது. இந்தியாவின் தலைசிறந்த 100 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பட்டியலை எடுத்து பார்த்தால், அதில் ஐந்தில் ஒரு பங்கு தமிழ்நாட்டில்தான் இருக்கும். நாட்டிலேயே ஆராய்ச்சி படிப்பை உரிய முறையில் மேற்கொண்டு முனைவர் பட்டம் பெறுகிற மாணவர்கள் எண்ணிக்கையும் தமிழகத்திலேயே அதிகம் உள்ளது. இவ்வாறாக உயர்கல்வித்துறையில் உச்சாணி கொம்பில் இருக்கையில், தமிழ்நாட்டு கல்வி நிலையங்களை காவி மயமாக மாற்றி விடலாமா என்ற எண்ணத்திலும், அங்கு மூட நம்பிக்கை கருத்துகளை விதைக்கவும் ஒன்றிய அரசு மறைமுக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதற்கு ஆளுநர் போன்ற ஊதுகுழல்களை அடிக்கடி பயன்படுத்தியும் வருகின்றனர். மக்களுக்குத் தேவையான திட்டங்களை மாநில அரசு தீட்டும்போதும், மாணவர்களுக்குத் தேவையான கல்விமுறையை திராவிட மாடல் அரசு அறிவுறுத்தும் போதும் அதற்கு தடைக்கல்லாக நிற்பதே ஆளுநரின் வேலையாக உள்ளது. நீட் தேர்வுகள் தொடங்கி, கல்வி நிதி நிறுத்தம், குலக்கல்வி முறையை புகுத்துதல், சனாதன தர்மத்தை போதித்தல் என ஒன்றிய அரசும், அதன் ஏஜென்டான ஆளுநரும் தமிழ்நாட்டில் உயர்கல்வியை எப்படியெல்லாம் சீர்குலைக்க முடியுமோ, அந்தளவுக்கு தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி மாணவ மனோநிலையை மாற்றி வருகின்றனர்.

ஆனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாணவர்கள் மத்தியில் அறிவியல் சார்ந்த கல்வி மற்றும் சமூகநீதி சார்ந்த பகுத்தறிவு முறைகளை மட்டுமே முன்னிலைப்படுத்தி வருகிறார். அதன் விளைவாகவே நான் முதல்வன் திறன் பயிற்சி திட்டம், கல்லூரி கனவு திட்டம், சிகரம் தொடு திட்டம், புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் உள்ளிட்ட அற்புதமான திட்டங்கள் மாணவர்களுக்கு கிடைத்தன. இவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்றும் வருகின்றனர். உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி, வேலைவாய்ப்புகளுக்கான முன்னெடுப்பு ஆகியவை மட்டுமே மாணவர்களை வருங்காலத்தில் வளப்படுத்தும்.

அதை விடுத்து சனாதன முறைகளுக்கு சாமரம் வீசும் விஸ்வகர்மா திட்டம், தேசிய கல்வி கொள்கைகள் மாணவர்களுக்கு வெறும் பிம்பத்தை மட்டுமே ஏற்படுத்த முடியும். தமிழக முதல்வர் சுட்டிக்காட்டுவது போல, நம்முடைய கல்வி நிலையங்கள் பகுத்தறிவுக்கு மாறான மூடநம்பிக்கைகளை பரப்புகிற இடமாக இருக்கவே கூடாது. அறிவியல் அணுகுமுறை மற்றும் சமூக நீதிக்கான தேடலே நம் மாணவர்களை உயர் கல்வியில் உயர்த்தும். கல்வி கூடங்களில்மூடநம்பிக்கைகளை விதைக்கிற பேச்சுகளை அனுமதிக்கவே கூடாது.

இந்திய இளைஞர்கள் மத்தியில் சமீபகாலமாக படிக்காமலே பெரிய ஆளாகும் மனோபாவமும் வளர்ந்து வருகிறது. அதற்காக கல்வியை முன்னிலைப்படுத்துவதை தவிர்த்துவிட்டு, இன்ஸ்டாகிராம், ரீல்ஸ், யூடியூப் ஆகியவற்றை சம்பாதிக்கும் வழிமுறைகளாக மிகைப்படுத்துவதும் தவறாகும். சமூக வலைதளங்கள் மூலம் லட்சம், லட்சமாக சம்பாதிக்கலாம். சோசியல் மீடியாவில் சாதிக்கலாம் என பல்வேறு புனை கதைகளும் மாணவர்கள் மத்தியில் புகுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் படிக்கும் காலத்தில் இவற்றையெல்லாம் ஓரம் கட்டி வைத்துவிட்டு, அறிவியல் சார்ந்த கல்வி ஒன்றே பிரதானம் என்ற முடிவுக்கு வருதலே நலம். சமூக வலைதளங்கள் சாதி, மதம், இனம் என பலரை குறுகிய வட்டத்திற்குள் கொண்டு அடைப்பதும் உண்டு. இவற்றுக்குள் விழுந்து சிக்கி சீரழிந்தால், மாணவ பருவம் வீணாகிவிடும். அறிவார்ந்த சமூகமே நல்லதொரு தமிழ்நாட்டை நமக்கு உருவாக்கி தரும் என்பதை உணரவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், மே 6 –

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் இன்று (06.05.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத் தில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து கழகத் தலைவரின் அவர்களின் ஆலோசனைகள் குறித்து

2. ”நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!, சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்

3. பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு –

கழகத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் கூடல்மாநகரில் ஜூன் 1ஆம் நாள் கூடுகிறது!

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை ஆர்.ஜி. பக்கிரிசாமி
### மே 6 (2024)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், தஞ்சை டெல்டா மாவட்டத்தில் திராவிட சுயமரியாதை உணர்வோடு கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த நாகை மாவட்டத்தில் மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் – நாகை ஒன்றிய பொறுப்பாளர் – ஒன்றிய துணை செயலாளர் – ஊராட்சி செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

விவசாயம் சங்க தலைவர், ஊராட்சி மன்ற தலைவராகவும் பல ஆண்டுகள் சிறப்பாக பணி செய்தவர்.

தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**